**ஏப்ரல் – 10**

# TNPSC துளிகள்

- உச்சநீதிமன்றத்தின் மிக மூத்த நீதிபதியான நூதலப்பட்டி வேங்கட ரமணா அடுத்த இந்தியத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - நீதிபதி ரமணா தற்போதைய தலைமை நீதிபதி சரத் அரவிந்த் பாப்டே அவர்கள் ஓய்வு பெறுவதையடுத்து 48வது இந்தியத் தலைமை நீதிபதியாக ஏப்ரல் 24 ஆம் தேதியன்று பொறுப்பேற்க உள்ளார்.
- குஜராத்தில் வன்கனேர் எனும் பகுதியினைச் சேர்ந்த முன்னாள் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான திக்விஜய்சிங் சாலா காலமானார்.
  - மூத்த காங்கிரஸ் தலைவரான இவர் 1982 முதல் 1984 வரையிலான பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தலைமையிலான அரசில் பதவி வகித்த இந்தியாவின் முதல் சுற்றுச்சூழல் துறை அமைச்சராவார்.

# தேசியச் செய்திகள்

## சர்வதேச காணொலி தேர்தல் பார்வையாளர்கள் திட்டம் 2021


- இந்தியத் தேர்தல் ஆணையம் சர்வதேச காணொலி தேர்தல் பார்வையாளர்கள் திட்டத்தை நடத்தி இருக்கிறது.
- இத்திட்டம் அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது மேற்கொள்ளப்பட்டது.
- இதன்கீழ், தேர்தல் முறைகள், வாக்குச் சாவடிகளைத் தயார் செய்தல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்குச் செய்யப்படும் வசதிகள் போன்றவற்றைப் பற்றிய தகவல்களை பிரதிநிதிகள் தெரிந்து கொள்ளும் வகையில் வாக்குச் சாவடிகளைக் காணொலி மூலம் பார்க்கும் வசதி செய்யப்பட்டது.
- பெருந்தொற்றுக் காலத்தில் சுதந்திரமான, நியாயமான, வெளிப்படையான, சிறப்பான மற்றும் பாதுகாப்பான தேர்தலை நடத்துவதே இதன் நோக்கமாகும்.
- ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, வங்காள தேசம், மற்றும் பூடான் உள்ளிட்ட 26 நாடுகள் மற்றும் 3 சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து சுமார் 106 பிரதிநிதிகள் இத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர்.



## ஒருங்கிணைந்த சுகாதார (உடல்நல) தகவல் தளம்

- சமீபத்தில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளத்தைத் தொடங்கி வைத்தார்.
- சுகாதாரத்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, இத்தகைய மேம்பட்ட கண்காணிப்பு முறையை மேற்கொள்ளும் முதல் நாடு இந்தியா ஆகும்.
- இத்தளம் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் இயக்கப்படும்.
- ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டமானது சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இத்தளமானது நாட்டில் நோய் கண்காணிப்பினை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நோக்கமானது தொற்றுநோய்களுக்கான பரவலாக்கப்பட்ட மாநிலம் சார்ந்த ஒரு கண்காணிப்பு முறையை நிறுவுவதன் மூலம் அடையப்படும்.
- இத்தளத்தின் முக்கிய அம்சங்கள் கைபேசிச் செயலிகள், சுகாதார வசதிகளுக்கான புவிசார் குறியிடுதல் போன்றவற்றின் மூலம் நிகழ்நேரத் தகவல்களை வழங்குதல் ஆகும்.
- இத்தளமானது சிறப்பான மருத்துவ வசதியை நல்குவதோடு சுகாதாரம் (உடல்நலம்) தொடர்பான தரவுகளை இரகசியமாக மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இத்தளம் நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் நிலவும் நோய்களைப் பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கும்.
- இத்தகவல்கள் ASHA பணியாளர்கள் மற்றும் ANM பணியாளர்கள் மூலமாக சேகரிக்கப் படும்.
- ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளம் 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்திற்கு உலக வங்கி உதவி வழங்குகிறது.
- நோய்த்தொற்றினை விரைவில் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு – புதிய சாதனை




- எத்தனால் வழங்கீட்டில், வருடத்தின் (2020-21) முதல் நான்கு மாதங்களில் இந்தியா 7.2% என்ற சதவிகிதத்திற்கும் மேலான அளவினை எட்டியுள்ளது.
- இந்தியா இந்நிலையை எட்டியது இதுவே முதல்முறையாகும்.

- இது 2022 ஆம் ஆண்டுக்குள் எத்தனாலை பெட்ரோலுடன் கலப்பதற்கான சதவிகித இலக்கான 10% என்ற அளவை அடைவதற்கான பாதையை நோக்கி இட்டுச் செல்கிறது.

### *எத்தனால் கலப்புத் திட்டம்*

- இத்திட்டம் 2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள், பின்வரும் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில், எத்தனாலைப் பெறுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளன.
    - கரும்பு
    - B-ரக கன சர்க்கரைக் கழிவுகள்
    - C- ரக கன சர்க்கரைக் கழிவுகள்
    - சேதமடைந்த உணவு தானியங்கள்

# சர்வதேசச் செய்திகள்


## E9 முன்னெடுப்பு

- E9 நாடுகளின் கல்வி அமைச்சர்கள் ஆலோசனைச் சந்திப்பிற்கு இந்தியக் கல்வி அமைச்சர் தலைமை தாங்கினார்.
- இந்த சந்திப்பு, தரமான கல்வி எனும் நீடித்த மேம்பாட்டு இலக்கு எண் 4 என்பதனை அடைவதற்கான ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த டிஜிட்டல் கல்விமுறையை அதிகரித்தல் எனும் E9 முன்னெடுப்பு பற்றியதாகும்.
- ஐ.நா.வின் தலைமையில் 1993 ஆம் ஆண்டில் E9 கூட்டாண்மை முதன்முதலில் நிறுவப் பட்டது.
- வங்காளதேசம், பிரேசில், சீனா, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ, நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை E9 நாடுகளாகும்.
- இந்த முன்னெடுப்பு நீடித்த மேம்பாட்டு இலக்கு எண் 4 என்பதற்கான செயல்பாட்டு நிரல்களை (Agenda) மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மூன்று உலகளாவிய கல்வி மாநாட்டு முன்னுரிமைகளின் உள்ள கல்வி முறைகளில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் இது மேற்கொள்ளப் பட்டது.
- அந்த மூன்று முன்னுரிமை நிலைகள்
    - ஆசிரியர்களுக்கு உதவுதல்,
    - திறன் மேம்பாட்டில் முதலீடு செய்தல் மற்றும்
    - டிஜிட்டல் பிளவினைக் குறைத்தல்.

# பொருளாதாரச் செய்திகள்

## போர்ப்ஸ் வருடாந்திர கோடீஸ்வரர்கள் குறியீடு

- போர்ப்ஸ் வருடாந்திர உலக கோடீஸ்வரர்கள் குறியீட்டில் தொடர்ந்து நான்காவது வருடமாக அமேசான் நிறுவனத்தின் நிறுவனர் செஃப் பெசோஸ் முதலிடத்தில் உள்ளார்.





| RANK | NAME | NET WORTH | | AGE | COUNTRY / TERRITORY |
|---|---|---|---|---|---|
| 1. | Jeff Bezos | $177 B | ▲ | 57 | United States |
| 2. | Elon Musk | $151 B | ▲ | 49 | United States |
| 3. | Bernard Arnault & family | $150 B | ▲ | 72 | France |
| 4. | Bill Gates | $124 B | ▲ | 65 | United States |
| 5. | Mark Zuckerberg | $97 B | ▲ | 36 | United States |
| 6. | Warren Buffett | $96 B | ▲ | 90 | United States |
| 7. | Larry Ellison | $93 B | ▲ | 76 | United States |
| 8. | Larry Page | $91.5 B | ▲ | 48 | United States |
| 9. | Sergey Brin | $89 B | ▲ | 47 | United States |
| 10. | Mukesh Ambani | $84.5 B | ▲ | 63 | India |

- 84.5 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற நிகர சொத்து மதிப்புடன் இந்தியாவின் கோடீஸ்வரரான முகேஷ் அம்பானி 10வது இடத்தில் உள்ளார்.
- 2,755 கோடீஸ்வரர்களை உள்ளடக்கிய இந்த 35வது போர்ப்ஸ் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது.
- இப்பட்டியலானது 2021 ஆம் ஆண்டின் மார்ச் 05 முதலான பங்குச் சந்தை விலைகள் மற்றும் சந்தை நிலவரங்களைப் பயன்படுத்திச் சொத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இன்ஜெனியூட்டி ஹெலிகாப்டர்

- நாசாவின் இன்ஜெனியூட்டி மினி-ஹெலிகாப்டர் ஆனது செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் தரையிறக்கப்பட்டது.
- இந்த அதி இலகுரக (Ultra light) விண்கலம் பிப்ரவரி 18 அன்று செங்கோளில் தரையிறங்கிய பெர்செவரன்ஸ் ஊர்தியுடன் இணைக்கப் பட்டிருந்தது.
- புவியின் வளிமண்டலத்தில் ஒரு சதவீதம் மட்டுமே கொண்ட அந்த வளிமண்டலத்தில் பறப்பதற்கு இன்ஜெனியூட்டி முயற்சிக்கும்.
- இது கடினமானது என்றாலும் நமது கோளின் ஈர்ப்பின் மூன்றில் ஒரு பங்கே கொண்ட அக்கோளின் ஈர்ப்பு விசை இதற்கு உதவும்.
- இன்ஜெனியூட்டி பறக்கும் போது உயர்தெளிவுத் திறன் கொண்ட (High resolution) புகைப்படங்களை எடுக்கும்.




## வோல்ஃப்-ரேயெட் நட்சத்திரங்கள்

- இந்திய வானியலாளர்கள் ஒரு மீவுளிர் விண்முகில் வெடிப்பினை (Supernova explosion) கண்டறிந்துள்ளனர்.
- அவர்கள் இதனை வோல்ஃப்-ரேயெட் நட்சத்திரங்கள் அல்லது WR (Wolf-Rayet) நட்சத்திரங்கள் எனப்படும் மிகவும் வெப்பமான நட்சத்திரங்களின் ஒரு தொகுப்பு என அடையாளம் கண்டுள்ளனர்.
- மீவுளிர் விண்முகில் வெடிப்பானது பேரண்டத்தில் அதிகளவிலான ஆற்றலை வெளியிடும் சக்தி வாய்ந்த ஒரு ஒளிரக் கூடிய நட்சத்திர வெடிப்பு ஆகும்.
- இத்தகைய மாற்றங்களை நீண்ட நாட்களுக்குக் கண்காணிப்பது என்பது வெடிக்கும் நட்சத்திரங்களின் இயல்பையும் வெடிக்கும் அவற்றின் பண்புகளையும் பற்றி புரிந்து கொள்வதற்கான வழியை ஏற்படுத்தும்.

- மேலும் மிகப்பெரிய நட்சத்திரங்களின் எண்ணிக்கையை கணக்கிடவும் இது உதவும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அறிவியல் ஆராய்ச்சிக்கான GD பிர்லா விருது

- பேராசிரியர் சுமன் சக்கரபர்த்தி, அறிவியல் ஆராய்ச்சிக்கான 30வது GD பிர்லா விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பொறியியல் அறிவியல் மற்றும் கட்டுப்படியாகக் கூடிய சுகாதார வசதிகளுக்கான தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் அதன் பயன்பாடு ஆகியவற்றிற்காக அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் இயந்திரப் பொறியியல் துறையில் பணியாற்றும் ஒரு ஆசிரியராவார்.
- அறிவியல் அல்லது தொழில்நுட்பத்தின் எந்த ஒரு பிரிவிலும் மூலதன மற்றும் சிறப்பான பங்களிப்பினை ஆற்றும் 50 வயதிற்கு கீழ் உள்ள சிறந்த இந்திய அறிவியலாளர்களை அங்கீகரிப்பதற்காக அறிவியல் ஆராய்ச்சிக்கான GD பிர்லா விருது வழங்கப் படுகிறது.

## துரிங் விருது 2020

- ஆல்பிரடு V. ஆஹோா அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான கணினி அமைப்புகள் கூட்டமைப்பின் A.M. துரிங் விருதினை வென்றுள்ளார்.
- ஆஹோா அவருடன் நீண்ட நாட்களாக இணைந்து பணி புரியும் ஜெஃப்ரி டேவிட் உல்மேன் என்பவருடன் இவ்விருதினைப் பகிர்ந்து கொள்கிறார்.
- இந்த துரிங் விருதானது கூகுள் நிறுவனம் வழங்கும் நிதி உதவியுடன் 1 மில்லியன் டாலர் பரிசுத் தொகையை உள்ளடக்கியதாகும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ரோமானியர்கள் தினம் – ஏப்ரல் 08

- சர்வதேச ரோமானியர்கள் தினமானது ரோமானியர் கலாச்சாரத்தைக் கொண்டாடவும் ரோமானிய மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கடைபிடிக்கப் படுகிறது.
- இத்தினம் லண்டன் அருகே உள்ள செல்ஸ்ஃபீல்டில் 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 முதல் ஏப்ரல் 12 வரை நடைபெற்ற ரோமானியப் பிரதிநிதிகளின் முதல் மாபெரும் சர்வதேச சந்திப்பினை நினைவு கூறும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- 1990 ஆம் ஆண்டு முதல் சர்வதேச ரோமானிய தினமானது சர்வதேச ரோமானிய ஒன்றியத்தால் கொண்டாடப் படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★